செய்தி வெளியீடு எண்.49 நாள்.21.01.2017

**திருவள்ளூர் கலை சங்க மைதானத்தில் 28-வது சாலை பாதுகாப்பு வார விழாவை முன்னிட்டு சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு பேரணியை மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் திரு.பா.பெஞ்சமின் அவர்கள் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., ஆகியோர் கொடியசைத்து துவக்கி வைத்தனர்.**

------------

திருவள்ளூர் கலை சங்க மைதானத்தில் 28-வது சாலை பாதுகாப்பு வார விழாவை முன்னிட்டு பள்ளி மற்றும் கல்லூரி மாணவ – மாணவிகள், வாகன ஓட்டுநர்கள் கலந்து கொண்ட சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு பேரணியை மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் திரு.பா.பெஞ்சமின் அவர்கள் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., ஆகியோர் இன்று (21.01.2017) கொடியசைத்து துவக்கி வைத்தனர்.

மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் கூறியதாவது "திருவள்ளூர் மாவட்டத்தில் 28-வது சாலை பாதுகாப்பு வார விழாவை முன்னிட்டு வாகன ஓட்டுநர்களிடையே பாதுகாப்பு குறித்த பல்வேறு நிகழ்வுகள் மூலமாக விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்ட வருகிறது. இதன் தொடர்ச்சியாக இன்று பள்ளி மற்றும் கல்லூரி மாணவ–மாணவிகள், வாகன ஓட்டுநர்களை கொண்டு விழிப்புணர்வு பேரணி நடைபெற்று வருகிறது. இதில் 300-க்கும் மேற்பட்ட மாணவ- மாணவிகள் கலந்து கொண்டு விழிப்புணர்வு பலகைகளை ஏந்தி சென்றனர்" என்று கூறினார்.

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் ஆகியோர் பொது மக்கள் மற்றும் வாகன ஓட்டிகளுக்கு விழிப்புணர்வு துண்டு பிரசுரங்களை வழங்கினார்கள். பேரணி கலைசங்க மைதானத்தில் துவங்கி இராஜாஜி சாலை, குளக்கரை தெரு வழியாக காமராஜர் சிலையருகே நிரைவடைந்தது.

இப்பேரணியில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.ஈ.டி.சாம்சன், மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் திரு.இராஜேந்திரன், வட்டார போக்குவரத்து அலுவலர்கள் திரு.இளங்கோ(திருவள்ளூர்(பொ.)), திரு.சம்பத்(செங்குன்றம்), திருவள்ளூர் ஒன்றிய கூட்டுறவுச் சங்கத் தலைவர் திரு.எம்.சின்னசாமி, பள்ளி மற்றும் கல்லூரி மாணவ – மாணவிகள், வாகன ஓட்டுநர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு:செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருவள்ளூர்.**